1989 நவம்பர் 2]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தப் பாலத்தை சீர்படுத்த வேண்டும் என்பதை அரசு உணர்கிறது. அதைச் சீர்செய்வதற்குச் சுமார் 4 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்று அரசு அனுமதி கேட்டு பொறியாளர்கள் எழுதியிருக்கிறார்கள். அதற்கு இடையில் மேடு பள்ளங்களை, குண்டு குழிகளாக இருப்ப வற்றை உடனடியாகச் செப்பனிட வேண்டுமென்று அரசு உத்தரவிட்டு அப்பணியும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அடுத்து, மாற்று வழிகளைப் பற்றி உறுப்பினர் சொன்ன கருத்துக்களை இந்த அரசு பின்னர் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஆர். சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கல்பாலத்தில் ஏற்கெனவே ஆக்கிரமிப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதில் அதிகமாக ஆட்களும், லாரிகளும் ஆக்கிரமிக்கும் நிலை இருக்கிறது. அங்கே, அந்தக் கல்பாலத்தில் லாரிகளை நிறுத்திக்கொண்டு சுத்தம்செய்கிறார்கள். எனவே, விரைவில் அரசு அங்குள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க நல்ல முடிவை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை ஏரி, குளம், குட்டைகளை ஆக்கிரமிப்பு செய்வதைப்பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது பாலத்தையும் ஆக்கிரமிக்கிறார்கள் என்ற செய்தியை உறுப்பினர் தெரிவித்திருக்கிறார். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விடுதல்.

*3256. டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி ;
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பரவனாற்றுக் கரை களைச் சீர்படுத்தி, ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து எடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஒரே மாத்திரையில் பல வைட்டமின்களை உள்ளடக்குவது போல பல கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பரவனாற்றுக் கரைகளை சீரமைப்பது, ஆக்கிரமிப்புகளை அகற்றி மராமத்து செய்வது, அடுத்து நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து விடப்படும் நீரை வெள்ளாறு இராஜன் கால்வாயில் விடுவதற்குத் திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று 3,4 கேள்விகளை உள்ளடக்கி ஒரே கேள்வியாக இங்கே கேட்டிருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தில் பரவனாற்று கரைகளை பலப்படுத்துவதைப் பொறுத்தவரையில் பரவனாற்றின் வலது கரையின் ஒரு பகுதியை பலப்படுத்துவதற்காக ஆக்சன் ஸ்கீம், செயலாற்றும் திட்டத்தின் கீழ் அந்தப் பணி செம்மையாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

10-05 மணி

ஆற்றின் இடது கரையைச் சீரமைக்க நேஷனல் வாட்டர் மேனேஜ்மெண்ட் பிராஜக்ட்டின் மூலமாக ஒரு திட்டம் தீட்டப் பட்டு, அந்தத் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆற்றில் ஆக்கிரமிப்புகளைப் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார். நீர் போக்குக்குத் தடையாக உள்ள ஆக்கிரமிப்புகள் இரண்டு வகைப்படும். ஒன்று, மனிதர்களால் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்பு கள். இன்னும் ஒன்று, இயற்கையாக ஏற்படுவது. இயற்கையாக ஏற்படுவதற்குச் சீமைக் காட்டாமணி, கருவேல மரங்கள் காரண மாகும். சீமைக் காட்டாமணி ஆற்றுப் படுகைகளிலும், ஏரிகளிலும் நிறைய வளர்ந்து, நீர் போக்குவரத்தைத் தடை செய்கிறது. எனவே சீமைக் காட்டாமணியை அகற்றுவதற்கு அரசு விரைவாக எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆடூர் அகரம் பக்கத்திலே இருக்கிற பாலத்திற்கு மேற்கேயும், கிழக்கே யும் கூட ஒரு பர்லாங் தூரத்திற்கு இத்தகைய காட்டாமணியை அழிக்கின்ற வேலையை அரசு நடத்தி இருக்கிறது. மேற்கொண்டு சீமைக் காட்டாமணியை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்கும். அடுத்து, கருவேல மரங்கள். கருவேல மரங்களும் நீர் போக்கு வரத்திற்குத் தடையாக இருக்கின்றன. இது வனத் துறையாலே நடப்பட்ட ஒன்றாகும். எனவே இவற்றை முழுவதுமாக எடுக்க வேண்டுமென்று வனத் துறையை நாங்கள் கேட்டுக் கொண்டிருக் கிறோம். அடுத்து மனிதர்களால் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்புகள். கரையினுடைய எல்லை எவ்வளவு என்று தெரிந்தால்தான் அவர் கள் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்களா, இல்லையா என்பது தெரியும். எனவே கரையினுடைய எல்லையை நிர்ணயிக்க வரு வாய்த்துறை சர்வே குழுவினிடம் அந்தப் பணி ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. எங்களுக்கு அந்த முடிவு தெரிந்த பிறகு, அவற்றை எடுக்க, ஆக்கிரமிப்பு இருந்தால் அகற்றுவதற்கு வேண்டிய நட வடிக்கைகள் எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, நெய்வேலியிலிருந்து தண்ணீர் இரண்டாவது சுரங்கத் திலே இருக்கிற மிகை நீர் இந்தக் கால்வாயிலே, அதாவது வெள் ளாற்று ராஜன் கால்வாயிலே விடப்படுமா என்று ஒரு கேள்வி கேட்டிருக்கிறார்கள். நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலே இருக்கிற மிகை நீர் இந்திரா காந்தி கால்வாய் மூலம் வடக்குப்

1989 நவம்பர் 2]

பிரதான கால்வாயிலே விடப்பட்டு, பிறகு அதன்மூலம் விருத்தாசலம் அணைக்கட்டு பாசன அமைப்பின் கீழ் 3,250 ஏக்கரும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனமாக 3,250 ஏக்கரும் இப்போது பாசனம் பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் மிகை நீரை நெய்வேலி நிலக்கரி நிறுவனம் விடுமானால், அவற்றைத் தாங்குவதற்கு, அந்தக் கொள்ளளவை ஏற்றுக்கொள்வதற்கு இந்திரா காந்தி கால்வாயால் முடியுமா என்று அரசு ஆய்ந்திருக்கிறது. இந்திரா காந்தி கால்வாயைப் பலப்படுத்துவதற்கு அரசு 45 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டத்தைத் தீட்டி அது அரசினுடைய ஒப்புதலுக்காக வந்திருக்கிறது.

மதியுள்ளான் பாலத்தைத் திருப்பிக் கட்டுதல்.

***3480. திரு. வி. தம்புசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கச்சனத்தில் இருந்து வலிவலம் கீவளூர் வழியாக நாகை செல்லும் மார்க்கத்தில் வலிவலம் அருகில் மதியுள்ளான் பாலம் இடிந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை சீர்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீவளூர் கச்சனம் சாலையில் அமைந்துள்ள மதியுள்ளான் பாலம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட பாலமாகும். 7—1—1981 அன்று ஓ.என்.ஜி.சி.-க்குச் சொந்தமான ஒரு கனரக வண்டி அந்தப் பாலத்தின் மீது செல்லும் போது பாலத்தின் வளைவுப் பகுதி பழுது அடைந்துவிட்டது. இதனால் அந்தச் சாலையில் போக்குவரத்து தடைப்பட்டது. சாலையில் போக்குவரத்து தடையின்றிச் செல்வதற்காக ஒரு வார காலத்திற்குள் தற்காலிகமாக ஆர்.சி.சி. குழாய் அமைத்து, மாற்றுப் பாதை அமைக்கப்பட்டு, மாற்றுப் பாதையில் போக்குவரத்துத் திருப்பி விடப்பட்டது. இவற்றைச் சீர் செய்ய வேண்டுமென்று ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அந்த மதிப்பீடு. எனவே, அந்தப் பணியைச் செய்வதற்காக 26—7—1989 அன்று ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டன. ஒப்பந்தப் புள்ளிகள் மதிப்பீடு 9.38 பர்சன்ட்டுக்கு மேல் வரப்பெற்றதால், மறு ஒப்பந்தப் புள்ளி 8—11—1989-க்குள் கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப் புள்ளி இறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

10-10 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இங்கே குறிப்பிட்டிருக்கிற பாலத்தைச் சீரமைக்கும் வேலை காலம் கடந்து வருவதால், அதன் மூலம் பாசனத்திற்காகச் செல்கிற நீர் தடைப்படுகிறது. ஆற்றினுடைய பாலத்தின் அகலத்தைக் குறைத்து குறுகிய குழாய் போடப்பட்டிருப்பதால், அதன் மூலமாகச் செல்கிற நீர் தடைப்பட்டு அதன் காரணமாக சரியான